டிரஸ்ட் ஆரம்பித்திட...
புதிதாக டிரஸ்ட், பவுண்டேஷன், கட்சி, ஆசிரமம், சங்கம், மன்றம், கழகம் பதிவு செய்திட தொடர்பு கொள்ளவும்.
பகவான் பவுண்டேஷன்
96004 02096

நல்லவே எண்ணல் வேண்டும்.., எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" புலனாய்வு நாளிதழ்
www.SAKKRAVIYUGAM.com

TAMIL PRESS CLUB
தமிழ் பிரஸ் கிளப்
Reg.No: 12/2013
தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் சிறப்பாக செயல்பட்டு வரும் பொது நல அமைப்பிற்கு 2026 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பம்...
ஆர்வமுள்ளவர்கள் அமைப்பாளராக இணைந்திட
88705 00000
9944616559

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 154 28.11.2025 FRIDAY KARTHIGAI : 11 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 154 28.11.2025 வெள்ளிக்கிழமை கார்த்திகை : 11 விலை : ரூ.5/-

3 ஒட்டன்சத்திரத்தில் அமமுக பொதுச் செய லாளர் டி.டி.வி.தினகரன் செய்தியாளர்கள் சந்திப்பு

4 காவல் துறையில் உயர் அதிகாரிகளுக்கான பதவி உயர்வு பட்டியல் தயாரிக்கும் பணி தீவிரம்

2 புதுச்சேரியில் பிரபல நிறுவனம் பெயரில் போலி மருந்துகள் தயாரித்த ஆலைக்கு சீல்!

# 'வாக்குரிமையை தவறாமல் பயன்படுத்தி ஜனநாயகத்தை வலுப்படுத்த வேண்டும்' : பிரதமர் மோடி

புதுடெல்லி: நவ.28-

வாக்குரிமையை தவறாமல் பயன்படுத்தி ஜனநாயகத்தை வலுப்படுத்த வேண்டியது நமது பொறுப்பு என அரசமைப்பு தினத்தில் பிரதமர் மோடி வலியுறுத்தி உள்ளார்.

நாடு சுதந்திரம் அடைந்த பிறகு உருவாக்கப்பட்ட அரசியல் சாசன வரைவு, இந்திய அரசியல் நிர்ணய சபையால் கடந்த 1949ம் ஆண்டு நவம்பர் 26ம் தேதி ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதையொட்டி ஆண்டுதோறும் நவம்பர் 26ம் தேதி அரசியலமைப்பு தினமாக கொண்டாடப்படும் என கடந்த 2015ம் ஆண்டு மத்திய அரசு அறிவித்தது.

இதன்படி, அரசியலமைப்பு தினம் நேற்று நாடு முழுவதும் கடைபிடிக்கப்பட்டது. இதையொட்டி பிரதமர் நரேந்திர மோடி தனது எக்ஸ் சமூக வலைதள பக்கத்தில், "அரசியலமைப்பு தினத்தில் அரசியலமைப்பை வடிவமைத்தவர்களுக்கு மரியாதை செலுத்துவோம். அவர்களின் தொலைநோக்குப் பார்வை, வளர்ந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நமது முயற்சியை தொடர்ந்து ஊக்குவிக்கிறது. நமது அரசியலமைப்பு சட்டம், கண்ணியம், சமத்துவம் மற்றும் சுதந்திரத்துக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது.




இது நமக்கு உரிமையை வழங்குவதோடு மட்டுமல்லாமல், குடிமக்களாக நமது கடமைகளையும் நினைவூட்டுகிறது. இவற்றை நிறைவேற்ற நாம் முயற்சிக்க வேண்டும். இந்தக் கடமைகள் ஒரு வலுவான ஜனநாயகத்துக்கு அடித்தளமாகும்" என கூறப்பட்டுள்ளது.

மேலும் அரசியலமைப்பு தினத்தை முன்னிட்டு, பிரதமர் மோடி எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது: அரசியலமைப்பின் சக்திதான், பொருளாதார ரீதியாக பின்தங்கிய குடும்பத்திலிருந்து வந்த என்னைப் போன்ற ஒருவர், 24 ஆண்டுக்கும் மேலாக தொடர்ந்து அரசியல் சாசன பதவியில் இருந்து பணியாற்ற உதவுகிறது. நமது அரசியலமைப்பு நமக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்கி உள்ளது.

எனவே, வாக்களிக்கும் உரிமையை தவறாமல் பயன்படுத்துவதன் மூலம் ஜனநாயகத்தை வலுப்படுத்த வேண்டியது நம்முடைய பொறுப்பு. மேலும் 18 வயது முடிவடைந்த, முதல் முறை வாக்காளர்களை கவுரவிக்கும் வகையில் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் அரசியலமைப்பு தினத்தில் சிறப்பு விழாக்களை நடத்த வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

சி.பி.ராதாகிருஷ்ணன் உரை: டெல்லியில் உள்ள நாடாளுமன்றத்தில் அரசியலமைப்பு தினத்தை முன்னிட்டு நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் பேசும்போது, "பாபா சாஹிப் பி.ஆர்.அம்பேத்கர், டாக்டர் ராஜேந்திர பிரசாத், என்.கோபால சுவாமி அய்யங்கார், அல்லாடி கிருஷ்ண சுவாமி ஐயர், துர்கா பாய் தேஷ்முக் உள்ளிட்டோர் அரசியல் சாசனத்தை உருவாக்கினர்.

இது ஒவ்வொரு பக்கமும் தேசத்தின் ஆன்மாவை பிரதிபலிக்கும் வகையில் உள்ளது. அரசியலமைப்பின் மதிப்புகள் மற்றும் கொள்கைகளை நிலை நிறுத்துவதற்கும் வலுவான, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் வளமான வளர்ந்த இந்தியாவுக்காக கூட்டாக உழைப்பதற்கும் உறுதி அளிப்பது தான் அரசியலமைப்புக்கு நாம் செலுத்தும் மிகப்பெரிய மரியாதை" என்றார்.



## திருப்பூர் மாநகர மாணவரணி அமைப்பாளர் திலகராஜ் திருமண விழாவில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்பு

திருப்பூர், நவ.28-

திருப்பூர் மத்திய மாவட்ட திமுக செயலாளர் திருப்பூர் தெற்கு தொகுதி சட்டப்பேரவை உறுப்பினருமான

க செல்வராஜ் எம்எல்ஏ அவர்களது தவப்புதல்வன் மாநகர மாணவரணி செயலாளர் செ.திலகராஜ் அவர்களின் திருமண விழா பப்பிஸ் ஹோட்டலில் நடைபெற்றது. இந்த விழாவினை சிறப்பிதற்காக தமிழக துணை முதலமைச்சரும் திமுக கழக இளைஞரணி இளைஞரணி செயலாளர் திரு உதயநிதி ஸ்டாலின் பங்கேற்ற போது எடுக்கப்பட்ட புகைப்படம் உடன் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி. ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் பிரகாஷ். திருப்பூர் மாநகராட்சி மேயர் தினேஷ்குமார், மாநில மாணவரணி செயலாளர் ராஜீவ் காந்தி. தெற்கு மாநகரச் செயலாளர் டி கே டி மூ நாகராஜ் மற்றும்

அவரது குடும்பத்தினர் உறவினர்கள் மற்றும் முன்னாள் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், திமுக மாநில மாவட்ட நிர்வாகிகள் உறவினர்கள் பங்கேற்றனர்...




■ தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு மதுரை மாவட்டம் பாலமேடு அருகே உள்ள சரந்தாங்கி கிராமத்தில் திமுக வடக்கு ஒன்றிய செயலாளர் முத்தையன், தலைமையில் பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ மாணவியருக்கு இனிப்பு வழங்கி கொண்டாடினார். அருகில் திமுக நிர்வாகிகள் உள்ளனர்.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

## தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு வானவில் பார்வையற்றோர் மற்றும் ஆதவரற்றோர் இல்லத்தில் உணவுப் பொருட்கள், இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது

### திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி,மு.க. அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி உணவுப்பொருட்களை வழங்கினார். மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் பொன் முருகன் அசைவ விருந்துக்கு நிதி உதவி வழங்கினார்

சின்னாளபட்டி, நவ.28

தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு வானவில் பார்வையற்றோர் மற்றும் ஆதவரற்றோர் இல்லத்தில் உணவுப் பொருட்கள் மற்றும் இனிப்புகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட பிரதிநிதி இளங்கோ பிரிட்டோ தலைமையில் நடைபெற்றது. திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி,மு.க. அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி உணவுப்பொருட்களை வழங்கினார். அதனைத் தொடர்ந்து மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் பொன் முருகன் அசைவ விருந்துக்கு நிதி உதவி வழங்கினார்.

திண்டு;க்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் ஒன்றியம், குட்டத்துப்பட்டி ஊராட்சி திமுக சார்பாக தமிழ்நாடு துணை தமிழக துணை முதல்வரும் திமுக கழக இளைஞரணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கசவனம்பட்டி வானவில் பார்வையற்றோர் மற்றும் ஆதவரற்றோர் இல்லத்தில் உணவுப் பொருட்கள் மற்றும் இனிப்புகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட பிரதிநிதி ஜெ.இளங்கோ பிரிட்டோ தலைமை தாங்கினார். பொதுக்குழு





உறுப்பினர் ரூபன் டென்சிங்ராஜா, கரிசல்பட்டி ஜோசப் ஆசான், குஞ்சனம்பட்டி கிளைச் செயலாளர் சிவா ஆகியோர் முன்னிலை வகித்தனர். இளைஞரணியைச் சேர்ந்த ஸ்டாலின் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளர்களாக திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் பொன்முருகன் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் பார்வையற்றோர் மத்தியில் பேசிய அவைத்தலைவர் காமாட்சி தமிழகம் முழுவதும், துணை முதல்வரின் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை இளைஞர்கள் எழுச்சியோடு கொண்டாடி வருகிறார்கள். ஊரக வளர்;ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் உத்தரவுப்படியும், கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் அவர்களின் வழிகாட்டுதலின் படியும், கிழக்கு மாவட்டம் முழுவதும் பிறந்தநாள் விழா கொண்டாடி வருகிறோம். பார்வையற்றோருக்கு இனிப்புகள் மற்றும் உணவுப் பொருட்கள் வழங்கியதில் மகிழ்ச்சி அடைகிறோம் என்றார். விழாவில் கலந்து கொண்ட கிழக்கு மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், பார்வையற்றோர் இல்லத்தில் உள்ள 60 பேருக்கு அசைவ விருந்து வழங்க நிதி உதவி வழங்கினார். பார்வையற்றோர் இல்லம் சார்பாக உதயநிதி அவர்கள் பல்லாண்டு வாழவும், மென்மேலும் புகழ் அடையவும், பாட்டுப்பாடி வாழ்த்துக்கள் கூறப்பட்டது. நிகழ்ச்சியில் ஒன்றிய பிரதிநிதி பெருமாள் (எ) சின்னக்காளை, கிளை அவைத்தலைவர் சேகர், கிளை நிர்வாகி ராமகிருஷ்ணன் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## தேவாரம் பேரூர் திமுக இளைஞரணி சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா

தேனி நவ.28

தேனி மாவட்டம் தேவாரம் பேரூர் திமுக மற்றும் இளைஞர் அணி சார்பில் பிறந்தநாள் விழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. திமுக கட்சி நிர்வாகிகள் இளைஞர் அணிகள் திரளாக கலந்து கொண்டு மைதானம் அருகில் இருந்து ஊர்வலமாக தேவாரம் காவல் நிலையம் அருகே வந்தடைந்தனர். பின்னர் பிறந்தநாள் விழா நிகழ்வாக கேக் வெட்டி இனிப்புகள் வழங்கியும்



கொண்டாடப்பட்டது.

தொடர்ந்து அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் மற்றும் கட்சி நிர்வாகிகளுக்கு சிக்கன் பிரியாணி வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் ஒன்றிய செயலாளர் மற்றும் பேரூர் செயலாளர் ஆஞ்சலிஸ் தாஸ் தலைமையில் மற்றும் இளைஞர் அணி செயலாளர் பிரபு சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார் உடன் மாவட்ட பிரதிநிதி கருணாநிதி, ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் வினோத் கிருஷ்ணன் மற்றும் கட்சி நிர்வாகிகள் இளைஞர் அணியினர் திரளாக கலந்து கொண்டு பிறந்தநாள் விழாவை வெகு சிறப்பாக கொண்டாடினர்

# புதுச்சேரியில் பிரபல நிறுவனம் பெயரில் போலி மருந்துகள் தயாரித்த ஆலைக்கு சீல்!



புதுச்சேரி. நவ,28.- புதுச்சேரி: பிரபல நிறுவனத்தின் பெயரில் புதுச்சேரியில் போலி மருந்துகள் தயார் செய்த தொழிற்சாலை மற்றும் அதனை சார்ந்த 4 குடோன்களில் இருந்த பல கோடி மதிப்பிலான மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டு சீல் வைக்கப்பட்டன. அவை ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

உத்தர பிரதேசத்தில் போலி மருந்து தொடர்பாக ஒருவர் சில மாதங்களுக்கு முன்பு கைது செய்யப்பட்டார். அவரிடம் நடந்த விசாரணையில் புதுச்சேரியில் இருந்து போலி மருந்து தயாரித்து வந்தது தெரியவந்தது.

இதையடுத்து மேட்டுப்பாளையம் தொழிற்சாலை வளாகத்தில், கடந்த செப்டம்பர் மாதம் நடைபெற்ற சோதனையில், உரிமமின்றி ரூ.99 லட்சத்து 47 ஆயிரம் மதிப்பிலான மாத்திரைகள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து மருந்து விநியோகத்தில் நடந்த முறைகேடுகள் தொடர்பாக சிபிசிஐடி விசாரிக்க தொடங்கியது. இந்நிலையில் புதுச்சேரியில் இருந்து பிரபல மருந்து நிறுவனம் பெயரில் போலி மருந்துகள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்வதாக சிபிசிஐடி போலீசாருக்கு வந்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

அதில் இந்த மருந்துகளை மொத்தமாக விற்பனை செய்து வந்தது சீர்காழியைச் சேர்ந்த ராஜா, காரைக்குடியைச் சேர்ந்த மெய்யப்பன் என தெரியவந்தது. இருவரையும் சிபிசிஐடி போலீசார் கைது செய்தனர்.

இதையடுத்து நடந்த விசாரணையில் புதுச்சேரி ரெட்டியார்பாளையம் பகுதியில் குடியிருந்து வரும் மதுரையைச் சேர்ந்த ராஜா என்பவர் புதுச்சேரி மேட்டுப்பாளையம் தொழிற்பேட்டையில் போலி மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை நடத்தி வருவது தெரியவந்தது.

இதனையடுத்த அங்கு சோதனை நடத்த போலீஸார் நேற்று மாலை சென்றனர். அப்போது தொழிற்சாலையின் கதவுகள் மூடப்பட்டிருந்தன. இதனால் போலீஸார் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்த போது, பிரபல நிறுவனத்தின் பேரில் மருந்துகள், அதனை தயாரிக்கும் இயந்திரங்கள் இருப்பதை கண்டறிந்தனர்.

இதுகுறித்து புதுச்சேரி போலீஸ் டிஐஜி சத்திய சுந்தரம் மற்றும் மருந்துகள் கட்டுப்பாட்டு துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன் பேரில் தொழிற்சாலைக்கு வந்த டிஐஜி, போலி மருந்து தொழிற்சாலை மற்றும் அதன் குடோன்களை சோதனையிட்டு போலி மருந்துகளை பறிமுதல் செய்து, அதனை மருந்துவ அதிகாரிகளிடம் ஆய்வுக்கு அனுப்ப உத்தரவிட்டார்.

இதைத்தொடர்ந்து மொத்தம் 4 குடோன்களில் இருந்த மருந்துகள் நேற்று இரவு வரை பறிமுதல் செய்யப்பட்டன. தொழிற்சாலை, குடோன்களுக்கு சீல் வைக்கப்பட்டன. இதையடுத்து தொடர்ந்து அனைத்து மருந்துகளையும் பறிமுதல் செய்த போலீஸார், அதனை ஆய்வுக்காக மருந்துகள் கட்டுப்பாட்டு ஆய்வாளர் இந்துமதி குழுவினரிடம் ஒப்படைத்தனர்.

மருந்துகள் கட்டுப்பாட்டு ஆய்வாளர் இந்துமதி கூறுகையில், "ஆய்வுக்கு மாத்திரைகள் எடுத்துள்ளோம். அதன்பிறகே இது காலாவதியா, போலியா என்பதை உறுதியாக தெரிவிக்க முடியும்" என்றார்.

இந்த ஆய்வில் எஸ்பிக்கள் ரகுநாயகம், சுருதி, சிபிசிஐடி இன்ஸ்பெக்டர் பாபுஜி உள்ளிட்டோர் பங்கேற்றனர். சிபிசிஐடி போலீஸ் தரப்பில் கூறுகையில், "பறிமுதல் செய்யப்பட்டுள்ள போலி மருந்துகளின் மதிப்பு பல கோடி ரூபாய் இருக்கும்.

முழு ஆய்வு மற்றும் விசாரணை முடிந்த பிறகே அதன் முழு மதிப்பு தெரியவரும். இவ்வழக்கில் தலைமறைவாக உள்ள உரிமையாளர் ராஜா உள்ளிட்ட 10க்கும் மேற்பட்டோரை கைது செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இதன் விவரங்கள் அனைத்தும் புதுச்சேரி சுகாதாரத்துறை செயலருக்கு தெரிவிக்கப்பட உள்ளது" என்றனர். மேலும் போலி மருந்துகள் புதுச்சேரியிலிருந்து நாடு முழுவதும் விற்பனைக்கு கொண்டு செல்லப்பட்டிருக்க அதிக வாய்ப்புகள் உள்ளதும் தெரிகிறது.

## எஸ்ஐஆர் பணி நெருக்கடி: இளையான்குடி ஆர்.ஐ. தற்கொலை முயற்சி



இளையான்குடி, நவ.28.- இளையான்குடியில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணி நெருக்கடியால் தேர்தல் பிரிவு வருவாய் ஆய்வாளர் தற்கொலைக்கு முயன்றார். தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி நவ. 4ம் தேதியிலிருந்து நடைபெற்று வருகிறது.

அதற்கான படிவங்களை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று கொடுத்தனர். தற்போது பூர்த்தி செய்த படிவங்களை சேகரித்து வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு அனுப்பி வருகின்றனர். அந்த படிவங்கள் இணையத்தில் பதிவேற்றும் பணி நடைபெற்று வருகிறது. இன்னும் ஒரு வாரம் மட்டுமே உள்ள நிலையில், இப்பணியை உயர் அதிகாரிகள் தீவிரப்படுத்தி வருகின்றனர்.


இந்நிலையில், சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வட்டாட்சியர் அலுவலக தேர்தல் பிரிவு உதவியாளர் (வருவாய் ஆய்வாளர்) பகவதி ராஜா(38) பணிச்சுமையால் மனஉளைச்சலில் இருந்து வந்துள்ளார். நேற்று அவர் அலுவலகத்தில் கையில் கத்தியால் கீறி தற்கொலைக்கு முயன்றார். ரத்தம் வெளியேறிய நிலையில் சக ஊழியர்கள் அவரை மீட்டு இளையான்குடி அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். பின்னர் தீவிர சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இதுகுறித்து இளையான்குடி போலீஸார் விசாரிக்கின்றனர். பகவதிராஜை பொதுப் பிரிவிலிருந்து தேர்தல் பிரிவுக்கு மாற்றிய போதே தனக்கு விருப்பமில்லை என்று கூறியுள்ளார். அதையும் மீறி அப்பிரிவுக்கு மாற்றிய நிலையில், தற்போது தற்கொலைக்கு முயன்றுள்ளார் என கூறப்படுகிறது.

அலுவலர் சங்கம் கண்டனம்: இதுகுறித்து தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாநில துணைத் தலைவர் தமிழரசன் கூறியதாவது: வருவாய் ஆய்வாளர் பகவதி ராஜா தற்கொலைக்கு முயன்ற சம்பவம் அதிர்ச்சியையும், வருத்தத்தையும் தருகிறது. வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி தொடங்கப்பட்ட நாளிலிருந்தே அனைத்து நிலை வருவாய்த்துறை அலுவலர்களுக்கும், தேர்தல் ஆணையம் மற்றும் உயர் அதிகாரிகளால் நெருக்கடி கொடுக்கப்படுகிறது. இதனால் கடுமையான மனஉளைச்சலில் உள்ளனர்.

வருவாய்த்துறையினரை நவீன கொத்தடிமைகளாக மாற்றிய தேர்தல் ஆணையம், உயர் அதிகாரிகளுக்கு கண்டனம் தெரிவிக்கிறோம். பணிச்சுமையை குறைத்து கூடுதல் அவகாசம் வழங்க வேண்டும். மீண்டும் இதுபோன்ற சம்பவங்கள் நிகழாமல் தடுக்க வேண்டும் என்று கூறினார்.

## ராமேசுவரம் கடலோர பகுதிகளில் விடிய விடியமழை



ராமேசுவரம், நவ.28.- ராமேசுவரம் கடலோரப் பகுதிகளில் பலத்த காற்றுடன் விடிய விடிய பெய்த மழையால் பல்வேறு குடியிருப்பு பகுதிகளை மழைநீர் சூழ்ந்து காணப்படுகிறது.

குமரிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் உருவான புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி காரணமாக தமிழகத்தின் தென் மாவட்டங்களுக்கு கனமழை எச்சரிக்கை விடப்பட்டிருந்தது.

ராமேசுவரம் கடலோரப் பகுதிகளில் பலத்த காற்றுடன் விடிய விடிய பெய்த மழையால் பல்வேறு குடியிருப்பு பகுதிகளை மழைநீர் சூழ்ந்து காணப்படுகிறது.

ராமேசுவரம் பேருந்து நிறுத்தப் பகுதி, தங்கச்சி மடம் ராஜீவ் காந்தி நகர், மண்டபம் கலைஞர் நகர், அண்ணா நகர் ஆகிய இடங்களில் மழைநீர் தேங்கியது. ராமேசுவரம் ராமநாத சுவாமி கோயில் வளாகத்தில் தேங்கிய மழைநீரால் பக்தர்கள் சிரமத்துக்கு ஆளாகினர். அங்கு தேங்கிய மழைநீரை கோயில் ஊழியர்கள் அப்புறப்படுத்தினர்.


முன்னதாக, மீன்வளத் துறை அதிகாரிகள் மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என அறிவித்திருந்ததால், மன்னார் வளைகுடா மற்றும் பாக் நீரிணை கடற்பகுதிகளில் ராமேசுவரம், பாம்பன், மண்டபம், தனுஷ்கோடி, தங்கச்சிமடம் உள்ளிட்ட பகுதிகளில் மீனவர்கள் 3வது நாளாக கடலுக்குச் செல்லவில்லை.

மேலும் பாம்பனில் 3ம் எண் புயல் கூண்டும் ஏற்றப்பட்டுள்ளது. செவ்வாய்க்கிழமை காலை 6 மணி நிலவரப்படி பாம்பனில் 62 மி.மீ., ராமேசுவரம் 57 மி.மீ, மண்டபம் 47.40 மி.மீ, தங்கச்சிமடத்தில் 40.60 மி.மீ, மழையும் பதிவானது.

## 'அய்யா பாமக' உதயமா? இணையத்தில் பரவும் தகவலுக்கு அருள் எம்எல்ஏ மறுப்பு

விழுப்புரம், நவ,28.- விழுப்புரம்: பாமகவில் தந்தைக்கும் மகனுக்கும் இடையே ஏற்பட்டுள்ள மோதல், நாள்தோறும் புதிய உச்சத்தை அடைந்து வருகிறது.

பாமகவின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பில் இருந்து அன்புமணி நீக்கப்பட்டதாக ராமதாஸும், தன்னை நீக்க யாருக்கும் அதிகாரமில்லை என அன்புமணியும் கூறி வருகின்றனர்.



புதிய கட்சியை அன்புமணி தொடங்கினால், அந்தக் கட்சிக்கு நல்ல ஒரு பெயரை தானே தெரிவிப்பதாக ராமதாஸ் அடிக்கடி கூறி வரும் நிலையில், 'அய்யா பாமக' என்ற புதிய கட்சியை நிறுவனர் ராமதாஸ் தொடங்க போகிறார் என்ற தகவல் சமூக வலைதளங்களில் வைரலாகி இருக்கிறது.

'அன்புமணி தரப்பினரின் திட்டமிட்ட செயல் இது' என ராமதாஸ் அணி குற்றஞ்சாட்டி வருகிறது. இதுகுறித்து பாமக (ராமதாஸ் தரப்பு) இணை பொதுச் செயலாளரான, சேலம் மேற்கு எம்எல்ஏ அருள் கூறும்போது, "தேர்தல் ஆணையம் நல்ல முடிவை தரும்.

பாமகவை நிறுவியவர் மருத்துவர் அய்யா. தற்போது தலைவராகவும் உள்ளார். டிச. 12ம் தேதி அய்யா நடத்தக் கூடிய ஆர்ப்பாட்டம் பிசுபிசுத்து போய்விடும் என எதிர்தரப்பு நினைத்தது. ஆனால், மக்களிடம் வரவேற்பை பெற்று வருகிறது.

எங்களது போராட்டத்தை பிசுபிசுக்க வைக்க, எதிர்த்தரப்பினர் என்னென்னமோ நாடகம் நடத்துகின்றனர். புதிய கட்சி தொடங்க வேண்டிய அவசியம் என்ன? அனைத்து அதிகாரமும் அய்யாவிடம் இருக்கும்போது, அவர் ஏன் புதிய கட்சியை தொடங்க வேண்டும்? என்ன அவசியம் இருக்கிறது?" என்றார்.

## மதுரை: ஐகோர்ட்டில் பாதுகாப்பு பணியில் இருந்த காவலர் துப்பாக்கியால் சுட்டு தற்கொலை

மதுரை, நவ.28.- மதுரை உயர்நீதிமன்ற வளாகத்தில் பாதுகாப்பு பணியில் இருந்த காவலர் மகாலிங்கம் தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டுகொண்டு, இன்று அதிகாலை தற்கொலை செய்து கொண்டார்.




உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் பாதுகாப்பு பணியில் மத்திய பாதுகாப்பு படையுடன் இணைந்து தமிழக காவல்துறையினர் சுழற்சி முறையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் மதுரை மாவட்டம் உசிலம்பட்டியை சேர்ந்த காவலர் மகாலிங்கம் என்பவர் நேற்று இரவு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தார்.

நீதிமன்ற நுழைவு வாயிலில் பணியில் இருந்த அவர் இன்று அதிகாலை தான் வைத்திருந்த துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டது தெரியவந்தது. 30 வயதான இவருக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை.

இது குறித்து தகவல் அறிந்த உயர் நீதிமன்ற காவல் நிலைய போலீசார் உடலை மீட்டு மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். காதல் விவகாரம் காரணமாக தற்கொலை செய்துள்ளதாக கூறப்படுகிறது. இருப்பினும் அவரது தற்கொலைக்கான உண்மையான காரணம் குறித்து விசாரித்து வருகின்றனர். இதற்கிடையில் தற்கொலை செய்த மகாலிங்கம் எழுதி வைத்திருந்த கடிதம் ஒன்றையும் போலீசார் கைப்பற்றி விசாரிக்கின்றனர்.

## சென்னையில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் ஒரே ஆண்டில் 2.2 லட்சம் ஹெச்.1பி விசா வழங்கி மோசடி

சென்னை. நவ.28.- சென்னையில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் ஒரே ஆண்டில் 2.2 லட்சம் ஹெச்.1பி விசாக்கள் வழங்கப்பட்டதில் மோசடி நடந்திருப்பதாக அமெரிக்க எம்பியும், பொருளாதார நிபுணருமான டேவ் பிராட் குற்றம் சாட்டியுள்ளார்.



இதுதொடர்பாக, பாட்காஸ்ட் நிகழ்ச்சி ஒன்றில் அவர் பேசியதாவது: ஓராண்டில் மொத்தமாகவே 85 ஆயிரம் பேருக்கு தான் ஹெச்.1பி விசா வழங்கவேண்டும் என்ற சட்டவிதிகள் உள்ளன.

ஆனால், இந்தியாவில் உள்ள சென்னையில் இயங்கும் அமெரிக்க தூதரகத்தில் மட்டுமே கடந்த ஆண்டில் 2.20 லட்சம் விசாக்கள் வழங்கப்பட்டு உள்ளது.

இது அனுமதிக்கப்பட்ட வரம்பைக் காட்டிலும் 2.5 மடங்கு அதிகமாகும். இந்தியாவில் ஹெச்.1பி விசா வழங்குவதன் பின்னணியில் மிகப்பெரிய மோசடியே நடக்கிறது. இதை ஒரு தொழிலாகவே செய்கின்றனர்.

இதேபோல், சென்னை தூதரகத்தில் 2.20 லட்சம் ஹெச்.1பி விசா வழங்கப்பட்டு போலவே ஊழியர்கள் தங்களது துணையை உடன் அழைத்துச் செல்ல 1.40 லட்சம் ஹெச்.4 விசாக்களும் வழங்கப்பட்டுள்ளன. இந்த மோசடிகள் எப்படி சாத்தியமானது என்பது புரியவில்லை. இவ்வாறு அவர் பேசினார்.

இதுதொடர்பாக முன்னாள் தூதரக அதிகாரி மஹ்வாஷ் சித்திக் கூறுகையில், "இந்தியாவில் இருந்து வரக்கூடிய 80 சதவீதம் ஹெச்.1பி விசாவின் விண்ணப்பங்கள் போலியானவை. சிலர் நேர்காணலில் கூட கலந்துகொள்ளாமல் மோசடி விசா பெறுகின்றனர்.

இந்தியாவில் மோசடியும், லஞ்சமும் சர்வ சாதாரணமாகிவிட்டது. ஹைதராபாத்தில் இருந்து போலியாக ஹெச்.1பி விசா பெற்றுக் கொடுக்கவே தனித் தனி நெட்வொர்க் இயங்கி வருகின்றன." என்று தெரிவித்தார்.

## செங்கோட்டையனின் அரசியல்வாழ்க்கை முடிந்துவிட்டது அதிமுக மூத்த தலைவர் செம்மலை விமர்சனம்



சென்னை, நவ.28.- சென்னை செங்கோட்டையனின் அரசியல் வாழ்க்கை முடிந்து போன ஒன்றாகி விட்டது" என அதிமுக மூத்த தலைவர் செம்மலை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியிருப்பதாவது: "பூனைக்குட்டி வெளியே வந்துவிட்டது. கட்சியை விட்டு வெளியேறுவதற்கு அவருக்கு ஒரு காரணம் தேவைப்பட்டிருக்கிறது. ஜெயலலிதா உயிருடன் இருந்தபோதே செங்கோட்டையன் இது போன்ற முயற்சியை எடுத்தவர்தான்.

தாயை பழித்தவனும், தலைமையை மதிக்காதவனும் ஒன்றே. எங்கள் பொதுச்செயலாளரை பொறுத்தவரை இந்த விஷயத்தில் அவசரப்படவில்லை. மிகவும் பொறுமை காத்தார். செங்கோட்டையனின் இந்த நடவடிக்கையால் அதிமுகவில் எந்த பாதிப்பும் ஏற்படாது.

50 ஆண்டுகால அரசியல் அனுபவம் மிக்க இவர், விஜய்க்கு அரசியல் சொல்லித் தர சென்றிருக்கிறாரா என்று தெரியவில்லை. காரணம், நதிகள் கடலில் கலப்பது இயற்கை. கடல்நீர் நதியில் சென்று கலப்பது காலம் செய்த பாவம். இவரது நடவடிக்கை தற்கொலைக்கு சமம் என்றுதான் நான் கருதுகிறேன். ஒருவன் தற்கொலை செய்ய முடிவு செய்துவிட்டால் அவனை என்ன காவல் காத்தாலும் காப்பாற்ற முடியாது.

வளர்ந்த கட்சியில் அனுபவித்துவிட்டு, இன்னொரு புதிய கட்சியை நான் வளர்க்கப் போகிறேன் என்று சொல்வது வேடிக்கையாக உள்ளது. விஜயின் ரசிகர்கள் அனைவரும் இளவயதுக் காரர்கள். கிட்டத்தட்ட வாக்குரிமை இல்லாதவர்கள்தான் அதில் அதிகமாக இருக்கின்றனர். அப்படிப்பட்டவர்களோடு வயது முதிர்ந்த மூத்த அரசியல்வாதி ஒன்றிணையவே முடியாது. எங்களுடன் அவர் இணைந்து பயணித்த அரசியல் வேறு, அங்கு போய் சிறுவயதுக்காரர்களோடு இணைந்து பழகி புதிதாக கட்சியை வளர்த்து, ஊர் ஊராக சென்று கொடியேற்றி ஆட்சியை பிடிப்பேன் என்பதெல்லாம் கற்பனைக்கு எட்டாத விஷயம். செங்கோட்டையனின் அரசியல் வாழ்க்கை முடிந்து போன ஒன்றாகி விட்டது" இவ்வாறு செம்மலை தெரிவித்தார்.

முன்னதாக இன்று, பனையூரில் உள்ள தமிழக வெற்றிக் கழக தலைமை அலுவலகத்துக்கு வந்த செங்கோட்டையன், அங்கு அக்கட்சியின் தலைவர் விஜய்யை சந்தித்து பேசினார். பின்னர் விஜய் முன்னிலையில் அக்கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார். அவருடன் அதிமுக முன்னாள் எம்பி சத்தியபாமா உள்ளிட்ட ஆதரவாளர்களும் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தனர்.

## தூய்மைப்பணி தனியார்மயத்தை எதிர்த்து உண்ணாவிரதம்

### 4 பேர் உடல்நிலை குறித்து அறிக்கை தினமும் அளிக்க நீதிமன்றம் உத்தரவு



சென்னை, நவ.28.- சென்னைதூய்மைப் பணிகளை தனியாருக்கு வழங்குவதை எதிர்த்து, காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் 4 தூய்மைப் பணியாளர்களின் உடல்நிலை குறித்து, தினமும் காவல் நிலையத்துக்கு அறிக்கை அளிக்க, உழைப்போர் உரிமை இயக்கத்துக்கு, சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியின், 2 மண்டலங்களில் தூய்மைப் பணிகளை தனியாருக்கு வழங்குவதை எதிர்த்து, தூய்மைப் பணியாளர்களான பாரதி, கீதா, ஜெனோவா மற்றும் வசந்தி ஆகிய 4 பேர் அம்பத்தூரில் உள்ள உழைப்போர் உரிமை இயக்க அலுவலகத்தில் தொடர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

உயர்நீதிமன்ற உத்தரவின்படி, போராட்டத்தில் ஈடுபடும் 4 பேரின் உடல்நிலையை பரிசோதித்த ஆவடி அரசு மருத்துவமனை மருத்துவர், அவர்களின் உடல் நிலை மோசமடைந்துள்ளதாக அறிக்கை அளித்திருந்தார்.

இந்த அறிக்கை, நீதிபதி ஜெகதீஷ் சந்திரா முன் தாக்கல் செய்த காவல் துறை தரப்பு கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் முகிலன், "அவர்களை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்க வேண்டும்.

அவர்களுக்கு பதிலாக வேறு 4 நபர்கள் உண்ணாவிரதத்தை தொடர அனுமதிக்கலாம்" என கேட்டுக் கொண்டார். ஆனால், 4 பேரின் உடல் நிலை இயல்பாக உள்ளதாக உழைப்போர் உரிமை இயக்கம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, தனியார் மருத்துவமனை மருத்துவர் மூலம் 4 பேரின் உடல் நிலையை ஆய்வு செய்து அறிக்கை அளிக்க உழைப்போர் உரிமை இயக்கத்துக்கு நீதிபதி உத்தரவிட்டிருந்தார். அதன்படி, உழைப்போர் உரிமை இயக்கம் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட தனியார் மருத்துவரின் அறிக்கையில், 4 பேரும் நல்ல உடல்நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து, 4 பேரின் உடல் நிலை குறித்து தினமும் 7 மணிக்கு அம்பத்தூர் போலீஸாருக்கு அறிக்கை அளிக்கும்படி, உழைப்போர் உரிமை இயக்கத்துக்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.




# உலக மீனவர் தின விழா திசையன்விளை கூட்டப்பனை மீனவருக்கு சிறந்த சமூக சேவகருக்கான விருது தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி வழங்கினார்

திசையன்விளை, நவ.28-

நெல்லை மாவட்டம் கூட்டப் பனை மீனவர் ஜோன்ஸ்-க்கு சிறந்த சமூக சேவகருக்கான விருது வழங்கப்பட்டது.

சென்னை ராஜ்பவனில் நேற்று உலக மீனவர் தின விழா கொண்டாடப்பட்டது. இதில் திருநெல்வேலி மாவட்டம் திசையன்விளை அருகே உள்ள கூட்டப்பனை கடற்கரை கிராமத்தைச் சேர்ந்த மீனவர் எக்ஸ்.ஜோன்ஸ் க்கு மீனவர் சமுதாயத்திற்கு சிறப்பான சமுதாய சேவை செய்ததை பாராட்டும் வகையில் சிறந்த சமூக சேவகருக்கான விருதினை தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி.வழங்கினார். கடந்த 35 வருடங்களுக்கு மேல் மீனவர் சமுதாய மக்களுக்கு சமுதாய பணியாற்றி வரும் ஜோன்ஸ் க்கு சிறந்த சமூக சேவகருக்கான விருது கிடைத்தது கூட்டப் பனை மற்றும் கடலோர மீனவ மக்கள் இடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.



# தண்டலை ஊராட்சியில் ரூ 55 லட்சம் செலவில் தார் சாலைக்கு பூமி பூஜை சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் பங்கேற்பு

அலங்காநல்லூர், நவ.28-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள தண்டலை ஊராட்சியில் பொது நிதி 55 லட்சம் ரூபாய் செலவில் 900 மீட்டரில் நடைபெற்றது இதில் சோழவந்தான் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் கலந்து கொண்டு பூமி பூஜையை தொடங்கி வைத்து பொதுமக்களிடம் கோரிக்கையை கேட்டு அறிந்தார் இந்த நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கதிரவன், வள்ளி, பொறியாளர் அமுதா, திமுக ஒன்றிய செயலாளகள் தனராஜ், பரந்தாமன், முத்தையன், அருண், நகரசெயலாளர் ரகுபதி, முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் தண்டலை சரவணன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் தனுஷ் கோடி, சேதுசீனி வாசன், பேரூராட்சி தலைவர் ரேணுகா ஈஸ்வரிகோவிந்தராஜ், துணைத்தலைவர் சுவாமிநாதன், ஒப்பந்ததா ரர்கண்ணன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சந்தன கருப்பு, சோழவந்தான் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் தவசதீஷ், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ராஜாஜி,ஊராட்சி செயலர் நாகராஜ், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்..



■ திமுக இளைஞர் அணி செயலாளரும், தமிழக துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் 49வது பிறந்த நாளை முன்னிட்டு திருச்சி மாநகர திமுக சார்பில் மேலப்பதூர் அருகிலுள்ள டி இஎல்சி பள்ளியில் மாநகரப் செயலாளரும் மேயருமான மு.அன்பழகன் ஏற்பாட்டில் மதிய உணவு வழங்கப் பட்டது.இந்நிகழ்வில் மாநகர் அவைத்தலைவர் வாமடம் ராமலிங்கம், கோட்டத்தலைவர் துர்கா தேவி, மாநகர் பொருளாளர் முத்து பழனி, மாநகர துணைச் செயலாளர்கள் பாலமுருகன், கலைச்செல்வி ஜெகநாதன், வட்டச் செயலாளர்கள் மார்சிங் பேட்டை செல்வராஜ்,எம்.ஏ.எஸ். மணி, தனசேகர், மாவட்ட பிரதிநிதி மணிவண்ணன், முரசொலி சுரேஷ், சிறுபான்மை துணை அமைப்பாளர் தஸ்தகீர்,சர்ச்சில்,ரஜினி கிங்,பீமநகர் ஆனந்த், இன்ஜினியர் நித்தியானந்தம், உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# திருச்சி மாநகர் மாவட்ட பாஜக சிறுபான்மை பிரிவு நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் மாநில தலைவர் நயினார் நாகேந்திரனுக்கு பிரம்மாண்ட வரவேற்பு அளிக்க முடிவு

திருச்சி, நவ.28-

திருச்சி மாநகர் மாவட்ட பாஜக சிறுபான்மை பிரிவு நிர்வாகிகள் அறிமுக ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது.கூட்டத்திற்கு சிறுபான்மை அணியின் மாநில செயற்குழு உறுப்பினர் வி.சார்லஸ் தலைமை தாங்கி பேசினார்.மாநகர் மாவட்ட சிறுபான்மை அணி தலைவர் இரா.அந்தோணிசாமி முன்னிலை வகித்து பேசினார்.மாநகர் மாவட்ட சிறுபான்மை அணியின் பொதுச் செயலாளர் ஏ. எப்.ரஹ்மான் வரவேற்று பேசினார்.சிறுபான்மை அணி மாவட்ட பொருளாளர் ச.பஷீர் நன்றி கூறினார்.



கூட்டத்தில் சிறுபான்மை அணியின் நிர்வாகிகள் வில்சன் தாமஸ்,மகபூப்ஜான், கிளிண்டன்,ஜகாங்கீர், ஜோசப் ஸ்டீபன், ஜோசப் பால்ராஜ்,ஜேம்ஸ் தாமஸ், ஜெயராஜ், ரூபன் மற்றும் திரளான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டது.பின்னர் மக்களை சந்திக்க திருச்சிக்கு சுற்றுப்பயணம் வருகை தரும் பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் எம்.எல்.ஏ.வுக்கு மாநகர் மாவட்ட சிறுபான்மை அணி சார்பில் மாவட்ட பாஜக தலைவர் ஒண்டி முத்து தலைமையில் ஏராளமான நிர்வாகிகள் திரண்டு வந்து பிரம்மாண்ட வரவேற்பு அளிப்பது என தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.

# சின்னாளபட்டி சிறப்புநிலை பேரூராட்சியில் எஸ்.ஐ.ஆர்.தீவிர வாக்காளர் சேர்க்கை திருத்த பட்டியல் பணிகள் மாவட்ட ஆட்சியர் செ.சரவணன் அதிரடி ஆய்வு

## 60 சதவீதம் வாக்காளர்களை பட்டியலில் இணைத்துள்ள நிலையில் மீதமுள்ள வாக்காளர்களை விரைவில் இணைக்க வேண்டும் மாவட்ட ஆட்சியர் உத்தரவு

சின்னாளபட்டி, நவ.28-

சின்னாளபட்டி சிறப்புநிலை பேரூராட்சியில் எஸ்.ஐ.ஆர். தீவிர வாக்காளர் சேர்க்கை திருத்த பட்டியல் பணிகளை மாவட்ட ஆட்சியர் செ.சரவணன் அவர்கள் அதிரடியாக ஆய்வு செய்ததுடன் 60 சதவீதம் வாக்காளர்களை பட்டியலில் இணைத்துள்ள நிலையில் மீதமுள்ள வாக்காளர்களை விரைவில் இணைக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டார்.



திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டி சிறப்பு நிலை பேரூராட்சியில் 25,600 வாக்காளர்கள் உள்ளனர். கடந்த 2021 சட்டமன்ற தேர்தலின்போது 18 ஆயிரம் வாக்குகளும், பாராளுமன்ற தேர்தலின்போது 16 ஆயிரம் வாக்குகளும் பதிவாகியிருந்தன. மாவட்ட ஆட்சியர் மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் உத்தரவுபடி பேரூராட்சி பணியாளர்கள் செயல் அலுவலர் இளவரசி தலைமையில் தீவிரமாக எஸ்.ஐ.ஆர். தீவிர வாக்காளர் சேர்க்கை திருத்த பட்டியல் பணிகளில் ஈடுபட்டு வந்தனர். கடந்த இரு தினங்களாக பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ராஜா அவர்கள் சிறப்பு முகாம் நடைபெறும் இடங்களுக்கு சென்று பார்வையிட்ட பின்பு பேரூராட்சி அலுவலகத்தில் வாக்காளர் பட்டியல் பதிவேற்றம் செய்யும் பணிகளை பார்வையிட்டு தாமதம் இல்லாமல் விண்ணப்ப படிவங்களைவிரைவாக பதிவேற்றம் செய்வது எப்படி என்பது குறித்து ஆலோசனை வழங்கினார்.

இந்நிலையில் புதன்கிழமை மாலை 6.00 மணியளவில் சின்னாளபட்டி சிறப்புநிலை பேரூராட்சிக்கு அதிரடியாக ஆய்வு செய்ய வந்த மாவட்ட ஆட்சியர் செ.சரவணன் அவர்கள் சின்னாளபட்டியில் இதுவரை எவ்வளவு வாக்காளர்களை பட்டியலில் இணைத்துள்ளீர்கள் என்று கேட்டபோது 25,600 வாக்காளர்களில் 60 சதவீதம் இணைத்துள்ளதாக அலுவலர்கள் தெரிவித்தனர். மேலும், பொதுமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் குறைந்த அளவில் வருகின்றன. வுஜீரையில் வீடு வீடாக சென்று விண்ணப்பங்களை பெற்று வாக்காளர் பட்டியலில் இணைப்பதாக பேரூராட்சி அலுவலர்கள் கூறினார்கள். அலுவலர்கள் மத்தியில் பேசிய மாவட்ட ஆட்சியர் செ.சரவணன் அவர்கள் முதலில் வாக்காளர்கள் நேரில் கொடுக்கும் விண்ணப் பங்களை விரைவாக பதிவேற்றம் செய்யுங்கள். அதன் பின்னர் இடம் மாறிச் சென்றவர்கள், நிரந்தரமாக இடம் மாறிச் சென்றவர்களை கணக்கிட்டு வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யாலாம் என்பதோடு, முதல் வாக்காளர் பட்டியல் வெளியிடுவதற்கு முன்பு குறைந்தது 18 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வாக்காளர்களை இணைக்க வேண்டுமென உத்தரவிட்டதுடன் விடுபட்ட வாக்காளர்கள் நேரில் வந்து மனு கொடுக்கும்போது விதிமுறைகளுக்கு உட்பட்டு பட்டியலில் இணைக்கலாம் என்றார். ஆய்வின் போது பயிற்சி கலெக்டர் மருத்துவர் வினோதினி, ஆதிதிராவிடர் நலத்துறை தாசில்தாரும், கண்காணிப்பு அலுவலருமான கிருஷ்ண மூர்த்தி, செயல் அலுவலர் இளவரசி, பேரூராட்சி மன்ற தலைவர் பிரதீபா கனகராஜ், சுகாதர அலுவலர் மணிகண்டன், எழுத்தர் ராமமூர்த்தி, கணக்காளர் கலைச்செல்வி, வரி வசூலர்கள் தங்கதுரை, சசிகுமார், பேரூர் கழக தி.மு.க. பொறுப்பாளர் மெடிக்கல் கோபி, கீர்த்தனா மற்றும் வாக்குசாவடி முகவர்கள் பலர் உடனிருந்தனர்.



# தேனி அனுமந்தன்பட்டியில் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா

தேனி நவ.28-

தேனி மாவட்டம் அனுமந்தன்பட்டி பேரூராட்சியில் பேரூர் செயலாளர் ராஜ்குமார் தலைமையில் மூத்த கழக முன்னோடிகள் முன்னிலையில் இளைஞர் அணி அமைப்பாளர் சத்யராஜ் துணை அமைப்பாளர் தளபதி ரஞ்சித் கலந்து கொண்டு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.

இந்த விழாவில் துணை அமைப்பாளர்கள் முத்து செல்வம், ரீகன் பேரூர் கழகத்தின் மூத்த நிர்வாகிகள் ஏராளமான உறுப்பினர்கள் கலந்து கொண்டு இனிப்புகள் வழங்கி பள்ளி மாணவ மாணவியர்களுக்கு நோட்டுப் புத்தகம் பேனா பென்சில் வழங்கினர்.

இந்த நிகழ்ச்சியில் பேரூராட்சி செயலாளர் ராஜ் குமார், இளைஞரின் துணை அமைப்பாளர் ரஞ்சித், அனுமந்தம்பட்டி பேரூராட்சி சேர்ந்த மூத்த உறுப்பினர்கள் கழகத்தின் நிர்வாகிகள் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



■ சின்னமனூர் ரவுண்டானாவில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. நகராட்சி மன்ற தலைவர் அய்யம்மாள் ராமு தலைமை தாங்கினார். மற்றும் துணைத் தலைவர் முத்துக்குமார்,அவைத்தலைவர் மனோகரன் கலந்துகொண்டு கேக் வெட்டி பொதுமக்களுக்கு வழங்கினார்.இந்த நிகழ்ச்சியில் திமுக தொண்டர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



■ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்,அவர்கள் மதுரை மாவட்டத்தில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கவும், முடிவுற்ற திட்ட பணிகளை துவக்கி வைக்கவும் மற்றும் புதிய திட்டப் பணிகளை அடிக்கல் நாட்டவும் வருகை தர உள்ளதால் மதுரை கிழக்கு வட்டம், உத்தங்குடியில் உள்ள கலைஞர் திடலில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகளை மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, பார்வை யிட்டார். மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார்,மாநகராட்சி ஆணையாளர் சித்ராவிஜயன் உடன் உள்ளார்.

# தேனி நிரந்தர மக்கள் நீதிமன்றத்தில் ஏழு வேகத்தடை அமைக்க நீதிபதி உத்தரவிட்டார்

தேனி நவ.28-

தேனி, நிரந்தமக்கள் நீதிமன்றத்தில் தேனி மாவட்டம். போடிநாய்க்கலூர் வட்டம், அம்மாபட்டி கிராமத்தை சேர்ந்த விஸ்வாசபுரத்தில் வசித்து வரும் காளியப்பன் என்பவர் கொடுத்த மனுவின் பேரில் விஸ்வாசபுரம் கிராமத்தை சுற்றியுள்ள பகுதியில் சாலைகளில் வேகத்தடை இல்லாத காரணத்தினால் அடிக்கடி வாகனங்களில் செல்பவர்கள் கீழே விழுந்து விபத்துக்கு உள்ளாகி வந்த குழல் நிலையில் உதவி இயக்குநர். நெடுஞ் சாலைதுறை போடிநாயக்கர் அவர்களை இந்த மனு



தொடர்பாக நேரில் அழைத்து விசாரணை மேற்கொண்டதன் பேரில் அம்மாபட்டி கிராமத்தை சேர்ந்த விஸ்வாசபுரம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதியில் சுமார் 7 வேகத்தடை அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு பணிநிறைவு பெற்ற புகைப்படம் மற்றும் அறிக்கையை உதவி இயக்குநர், நெடுஞ் சாலைதுறை, போடிநாயக்கனூர் அவர்கள் தேனி நிரந்தர மக்கள் நீதிமன்றத்தில் மனுதாரர் மற்றும் ஊர் பொதுமக்கள் முன்னிலையில் சமர்ப்பித்துள்ளார் என மாண்புமிகு தலைவர்! மாவட்ட நீதிபதி. ஏ ஜே கே ரஜினி தெரிவித்துள்ளார்.

# திருப்பூர் மாவட்டத்தில் SIR தீவிர திருத்தம் - 2026 வாக்காளர்கள் பூர்த்தி செய்யப்பட்ட கணக்கீட்டு படிவங்களை சமர்ப்பிக்க கடைசி நாள் 04.12.2025

திருப்பூர், நவ.28-

திருப்பூர் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் - 2026 முன்னிட்டு வாக்காளர் பூர்த்தி செய்யப்பட்ட கணக்கீட்டு படிவங்களை சமர்ப்பிக்க கடைசி நாள் 04.12.2025 ஆகும்.

மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளில் பணிபுரியும் பணியாளர்கள், வாக்குச்சாவடிநிலை அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலை முகவர்கள், அந்தந்த உள்ளாட்சி அமைப்பு

அலுவலகங்களில் திருப்ப கொடுத்து உங்களது பெயர் வரைவு வாக்காளர் பட்டியல்2026.ல் இடம் பெறுவதை உறுதி செயயும்படி கேட்டுப்கொள் ளப்படுகிறது. இவ்வாறு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட

ஆட்சித் தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே



■ திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதி, உடுமலை ஒன்றியம், கண்ணமநாயக்கனூர் ஊராட்சி, பாலப்பம்பட்டி தி.மு.கவை சேர்ந்த முன்னாள் கிளைக் கழக செயலாளர் வெங்கிடுசாமி, முன்னாள் வார்டு உறுப்பினர் தங்கராஜ், சகாதேவன், பரமசிவம் ஆகியோர் தி.மு.கவிலிருந்து விலகி தங்களை, திருப்பூர் புறநகர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர், மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினர் சி.மகேந்திரன் எம்.எல்.ஏ அவர்கள் முன்னிலையில் தங்களை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். உடன் உடுமலை கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் ராஜசேகரன், எம்ஜிஆர் மன்ற ஒன்றிய செயலாளர் சுப்பிரமணியம், ஒன்றிய கழக பொருளாளர் முருகேசன், பாலப்பம்பட்டி நிர்வாகிகள் ராமலிங்கம், தங்கராஜ் ஆகியோர் இருந்தனர்.

# ஒட்டன்சத்திரத்தில் அமுமுக பொதுச் செய லாளர் டி.டி.வி.தினகரன் செய்திளார்கள் சந்திப்பு

ஒட்டன்சத்திரத்திரம், நவ.28-

ஒட்டன்சத்திரத்தில் அமுமுக பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரன் செய்திளார்கள் சந்திப்பு திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்திரத்தில் அம்மா மக்கள் முன்னேற்றக் கழக தொப்பம்பட்டி ஒன்றிய செயலாளர் வி.தண்டபாணி இல்ல திருமண விழாவில் பங்கேற்ற அம்மா மக்கள் முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரன் செய்தியாளர் சந்திப்பில் அதிமுக முன்னோடி அண்ணன் செங்கோட்டையன் சட்ட மன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தது பின்னர் தமிழக வெற்றி கழக தலைவர் விஜய் சந்தித்து குறித்து கேள்வி எழுப்பிய போது அண்ணன் செங்கோட்டையன் இந்த சந்திப்பு குறித்து ஊடகங்களில் சந்திப்பு குறித்து தகவல்கள் வெளியான பின்பே அதை குறித்து பேசமுடியும் எனவே நான் மதிக்க கூடிய பண்பானவர் நல்ல நிர்வாக திறமை யானவர் அவரை நீக்கியதால் இழப்புயாருக்கு என்று தெரியும். அமுமுக வைக்கும் கூட்டணி வியூகம் பொறுத்திருந்து பாருங்கள் என்று தெரிவித்தார் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் தலைவர் டி.டி.வி.தினகரன் இச்செய்தியாளர்கள் சந்திப்பின்போது மாவட்ட செயலாளர் கே.பி.நல்லசாமி நகர செயலாளர் கே சுப்பிரமணி அம்மா பேரவை செயலாளர் அம்மா மெஸ் செல்வம்,

# காவல் துறையில் உயர் அதிகாரிகளுக்கான பதவி உயர்வு பட்டியல் தயாரிக்கும் பணி தீவிரம்




சென்னை. நவ.28.-

சென்னை: தமிழக காவல் துறையில் உயர் போலீஸ் அதிகாரிகளுக்கான பதவி உயர்வு பட்டியல் தயாரிப்புப் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது. மேலும், சட்டம்ஒழுங்கு பொறுப்பு டிஜிபியாக வெங்கடராமனே தொடர்கிறார்.

ஐபிஎஸ் அதிகாரிகளான சீமா அகர்வால், ராஜீவ் குமார், சந்தீப்ராய் ரத்தோர், அபய்குமார் சிங், வன்னிய பெருமாள், மகேஷ் குமார் அகர்வால், வெங்கடராமன், வினித் தேவ் வான்கடே, சஞ்சய் மாத்தூர் ஆகியோர் டிஜிபிக்களாக பல்வேறு பிரிவுகளில் பணிபுரிகின்றனர்.

தலைமை டிஜிபியான சட்டம்ஒழுங்கு டிஜிபியாக இருந்த சங்கர் ஜிவால் கடந்த ஆக.31ம் தேதி ஓய்வுபெற்ற நிலையில், புதிய சட்டம் ஒழுங்கு டிஜிபி இதுவரை நியமிக்கப்பட வில்லை. அதேநேரம் பொறுப்பு டிஜிபியாக நிர்வாகப் பிரிவில் இருந்த வெங்கடராமனை தமிழக அரசு நியமித்தது.

இந்நிலையில், நிரந்தர டிஜிபியாக சீனியாரிட்டியில் உள்ள சீமா அகர்வால், ராஜீவ் குமார், சந்தீப் ராய் ரத்தோர் ஆகியோரில் ஒருவரை நியமிக்க வேண்டும் என எதிர்க்கட்சி உள்பட பல்வேறு தரப்பிலிருந்தும் தொடர்ந்து அழுத்தம் தரப்பட்டு வருகிறது.

மேலும், இதுதொடர்பான வழக்கு நீதிமன்றத்திலும் நடந்து வருகிறது. ஆனால், தற்போது வரை இந்த விஷயத்தில் தமிழக அரசு மவுனம் காக்கிறது. இதற்கிடையே, அடுத்த பதவி உயர்வுக்கான போலீஸ் அதிகாரிகளின் பட்டியல் தயாரிக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

அதாவது 1995ல் ஐபிஎஸ் ஆக தேர்வான கூடுதல் டிஜிபிக்களான டேவிட்சன் தேவாசீர்வாதம், சந்தீப் மித்தல், பாலநாக தேவி ஆகிய 3 பேரும் டிசம்பர் 31ம் தேதி அல்லது ஜனவரி முதல் தேதியில் டிஜிபியாக பதவி உயர்த்தப்பட உள்ளனர்.

அதோடு, ஐஜிக்களாக உள்ள அன்பு, பிரேம் ஆனந்த் சின்ஹா, தீபக் டாமோதர், செந்தில்குமார், அனிதா உசேன், நஜ்மல் ஹோடா, மகேந்திர குமார் ஆகிய 7 அதிகாரிகள் கூடுதல் டிஜிபிக்களாக பதவி உயர்வு பெற உள்ளனர். மேலும் 15 எஸ்.பிக்களும் டிஐஜி யாக பதவி உயர்வு பெற உள்ளனர்.

இதுதவிர, அடுத்த மாதம் முதல் வாரத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் மாவட்ட ஆட்சியர்கள், எஸ்.பிக்கள் மாநாடு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. மாநாடு முடிந்தவுடன் 20க்கும் மேற்பட்ட போலீஸ் அதிகாரிகள் பணியிடம் மாற்றம் செய்யப்பட உள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

அந்த பட்டியலும் தற்போது முழு வீச்சில் தயாராகி வருகிறது. அதேநேரம், நிரந்தர டிஜிபி விவகாரத்தில் அரசு அவசரம் காட்டாது; வெங்கடராமன் தொடர்ந்து டிஜிபியாக செயல்படுவார் என்று போலீஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# தங்கம் விலை சவரனுக்கு ரூ.240 குறைவு; ஒரு சவரன் ரூ.94,160




சென்னை:, நவ.28.-

சென்னையில் 22 காரட் ஆபரண தங்கம் விலை சவரனுக்கு ரூ.240 குறைந்து, ஒரு சவரன் ரூ.94,160க்கு விற்பனை ஆகிறது.

சர்வதேச நிலவரங்களால், நம் நாட்டில் தங்கம் விலையில் தொடர்ந்து ஏற்ற, இறக்க நிலை காணப்படுகிறது. தமிழகத்தில் நேற்று முன்தினம் (நவ.,25) ஆபரண தங்கம் கிராம், 11,720 ரூபாய்க்கும், சவரன், 93,760 ரூபாய்க்கும் விற்பனையானது. வெள்ளி கிராம், 174 ரூபாய்க்கு விற்கப்பட்டது. நேற்று (நவ.,26) தங்கம் விலை கிராமுக்கு, 80 ரூபாய் உயர்ந்து, 11,800 ரூபாய்க்கு விற்பனையானது. சவரனுக்கு, 640 ரூபாய் அதிகரித்து, 94,400 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

வெள்ளி கிராமுக்கு, 2 ரூபாய் உயர்ந்து, 176 ரூபாய்க்கு விற்பனையானது. இந்நிலையில் இன்று (நவ.,27) 22 காரட் ஆபரண தங்கம் விலை சவரனுக்கு ரூ.240 குறைந்து, ஒரு சவரன் ரூ.94,160க்கு விற்பனை ஆகிறது. கிராமுக்கு ரூ.30 குறைந்து ஒரு கிராம் ரூ.11,770க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. வெள்ளி விலை கிராமிற்கு ரூ.4 உயர்ந்து ஒரு கிராம் ரூ.180க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

# “தலைமை அழைத்தால் டெல்லி செல்வேன்” முதல்வர் மாற்றம் பற்றி சித்தராமையா தகவல்



பெங்களூரு: நவ.28-

கர்நாடகாவில் முதல்வர் மாற்றம் தொடர்பான சர்ச்சை அதிகரித்துள்ள நிலையில், ‘காங்கிரஸ் உயர் தலைமை அழைத்தால் டெல்லிக்குச் செல்வேன்’ என்று முதல்வர் சித்தராமையா கூறியுள்ளார்.

கர்நாடகாவில் காங்கிரஸ் அரசு பதவியேற்று நவம்பர் 20 அன்று தனது ஐந்தாண்டு பதவிக் காலத்தின் முதல் பாதியை கடந்தது. ஆட்சியின் முதல் இரண்டரை ஆண்டு காலம் சித்தராமையா முதல்வராகவும், அடுத்த இரண்டரை ஆண்டு காலம் டி.கே.சிவகுமார் முதல்வராகவும் இருப்பார்கள் என பேசப்பட்டதாக தகவல்கள் வெளியாகின. இதன் காரணமாக தற்போது சிவகுமாரை முதல்வராக்க வேண்டும் என அவரின் ஆதரவு எம்எல்ஏக்கள் டெல்லியில் காங்கிரஸ் தலைமைக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில், பெங்களூருவில் செய்தியாளர்களிடம் பேசிய மல்லிகார்ஜுன கார்கே, “ நான் அனைவரையும் அழைத்து விவாதிப்பேன். ராகுல் காந்தியும் இந்த விவாதத்தில் இருப்பார். மற்ற உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள். முதல்வர் மற்றும் துணை முதல்வரும் கலந்து கொள்வார்கள். இவர்கள் அனைவருடனும் கலந்துரையாடிய பிறகு முடிவு எடுக்கப்படும். உயர் தலைமைக்கு ஒரு குழு உள்ளது, நான் தனியாக இல்லை. முழு உயர் தலைமை குழுவும் விவாதித்து ஒரு முடிவை எடுக்கும்” என்று அவர் கூறினார்.

கார்கேவின் கருத்து குறித்து செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்த சித்தராமையா, "உயர்நிலை தலைமை அழைத்தால் நான் டெல்லி செல்வேன்" என்று கூறினார்.

இருப்பினும், பெங்களூருவில் நடந்த செய்தியாளர் சந்திப்பின் போது முதல்வர் பதவி குறித்த கேள்விகளுக்கு கருத்து தெரிவிக்காமல் சித்தராமையா வழக்கம் போல் தனது பணிகளை தொடர்ந்தார். அப்போது அவர், மாநிலத்தில் அதிக மழையால் பாதிக்கப்பட்ட 14 லட்சம் ஹெக்டேர் பயிர் சேதத்திற்கு ரூ.1,033 கோடி நிவாரணத் தொகையை அறிவித்தார்.

# திமுகவும் அதிமுகவும் வேறு வேறு அல்ல

## தவெகவில் இணைந்தபின் செங்கோட்டையன் விமர்சனம்




சென்னை, நல.28.-

சென்னை: "இன்று திமுக வேறு, அதிமுக வேறு அல்ல. இரண்டும் ஒன்றாக இணைந்துதான் பயணத்தை மேற்கொண்டு வருகின்றன" என்பதை நாடறியும் என்று தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்த முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்தார்.

தவெக தலைவர் விஜய் முன்னிலையில் அக்கட்சியில் இணைந்த கே.ஏ. செங்கோட்டையன், பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது அவர் கூறியதாவது: “அதிமுகவில் எம்ஜிஆரால் நான் அடையாளம் காட்டப்பட்டவன். அப்போது இந்த கட்சி 100 நாட்கள் கூட நீடிக்காது என்று எதிர்கட்சிகள் சொன்னர்கள். ஆனால் அண்ணாவால் பாராட்டப்பட்டவர் எம்ஜிஆர். அந்த தலைவர் மறைந்தபோது அதிமுக இரண்டாக உடைகிற சூழல் எழுந்தபோது ஜெயலலிதாவின் வழியில் நான் என் அரசியல் பயணத்தை மேற்கொண்டேன்.

ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு காலச்சூழல் காரணமாக மூன்று கூறுகளாக அதிமுக பிரிந்தது. எல்லாரும் ஒன்றினைய வேண்டும் என்றுதான் கருத்துகளை வெளிப்படுத்தினோம். ஆகவே இன்றைய சூழலில் நான் சொல்ல விரும்புவது, ‘நானென்று ஒருவன் நினைத்தான், ஆண்டவன் தானென்று பார்த்துக் கொள்வார்’’.

முதலில் என்னுடைய பொறுப்புகளை எடுத்தார்கள். தேவர் ஜெயந்திக்கு சென்று திரும்பியபிறகு என்னுடைய உறுப்பினர் பதவியை கூட எடுத்துக் கொண்டனர். 50 ஆண்டுகாலம் இந்த அரசியல் பயணத்தில் நான் சந்தித்த ஏற்றத் தாழ்வுகளுக்கு பரிசுதான் இது. மகேஷ் என்பவரின் தந்தையின் இறப்புக்கு நான் சென்றதால் அவருடைய அடிப்படை உறுப்பினர் பதவியையும் பறித்துள்ளனர்.

இதனை கருத்திக் கொண்டுதான் தெளிவான முடிவு எடுத்து நேற்று என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு இன்று தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்திருக்கிறேன். இங்கு ஏன் இணையவேண்டும் என்ற கேள்வி பலருக்கும் எழக்கூடும். இன்று திமுக வேறு, அதிமுக வேறு என்பதல்ல. இரண்டும் ஒன்றாக இணைந்துதான் பயணத்தை மேற்கொண்டு வருகின்றன என்பதை நாடறியும்.

ஒரு தூய்மையான ஆட்சி தமிழகத்தில் மலர்வதற்கு தமிழக வெற்றிக் கழகம் என்ற மாபெரும் ஒரு இயக்கத்தை உருவாக்கி மக்கள் மனதில் இடம்பிடித்துள்ளார் விஜய். தமிழகத்தில் ஒரு மாற்றம் வேண்டும். இவர்கள் மட்டும்தான் ஆள வேண்டுமா? என்ற எண்ணம் மக்கள் மனதில் எழுந்துள்ளது. எல்லாம் மாநிலங்களிலும் மாற்றம் உருவாகிக் கொண்டிருக்கிறது. 2026 தேர்தலில் மக்களால் மாபெரும் புரட்சி உருவாகி வெற்றி என்ற இலக்கை விஜய் எட்டுவார்’’ இவ்வாறு செங்கோட்டையன் பேசினார்.

பின்னர் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த அவர், “அதிமுகவை ஒருங்கிணைக்க நான் எந்த கெடுவும் விதிக்கவில்லை. எம்ஜிஆர், ஜெயலலிதா இருக்கும் வரை தூய்மையான ஆட்சி நடைபெற்று வந்தது. அதனால் இருவரும் பலமுறை வெற்றி பெற்றனர். திமுகவிலிருந்தோ, தேசிய கட்சிகளில் இருந்தோ என்னை யாரும் சந்திக்கவில்லை’’ என்று பதிலளித்தார்

# மெரினாவில் வியாபாரிகளை நெறிப்படுத்தும் விவகாரம் அதிகாரிகள் ஆஜராகி விளக்கமளிக்க நீதிமன்றம் உத்தரவு




சென்னை, நவ.28.-

சென்னை: மெரினா கடற்கரையில் சாலையோர வியாபாரத்தை நெறிப்படுத்துவது தொடர்பாக அறிக்கை தாக்கல் செய்யாதது குறித்து விளக்கமளிக்க, சுற்றுச்சூழல் துறை செயலர், சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மெரினா கடற்கரையில் கடைகளை ஒதுக்கக் கோரி, சென்னை திருவல்லிக்கேணியை சேர்ந்த தேவி என்பவர் தாக்கல் செய்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் ஆர்.சுரேஷ்குமார், ஏ.டி.ஜெகதீஷ் சந்திரா அடங்கிய அமர்வு, “மெரினா கடற்கரையில் சாலையோர வியாபாரத்தை நெறிப்படுத்த, மாநகராட்சி ஏதேனும் திட்டம் வைத்திருக்கிறதா? சாலையோர வியாபாரிகளின் பிரச்சினையை எவ்வாறு தீர்ப்பது என்பது குறித்து, சுற்றுச்சூழல், வனத்துறை செயலர், மாநகராட்சி ஆணையர் மற்றும் காவல் துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி, அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்’’ என உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, ஏற்கெனவே பிறப்பித்த உத்தரவின் படி அறிக்கை தாக்கல் செய்யப்படாதது குறித்து அதிருப்தி தெரிவித்த நீதிபதிகள், “உலகத்தில் 2வது பெரிய கடற்கரையான மெரினா கடற்கரை மேம்பாட்டில் அக்கறை காட்டவில்லை.

எந்த உத்தரவு பிறப்பித்தாலும் அமல்படுத்துவதில்லை. இதை சரியான அணுகுமுறையாக கருத முடியாது. இது தொடர்பாக டிச.10ம் தேதி ஆஜராகி விளக்கமளிக்க வேண்டும்’’ என்று சுற்றுச்சூழல் துறை செயலர், சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிட்டனர்.

# நமக்கான புதிய சட்டங்களை நாமே உருவாக்க வேண்டும்; கவர்னர் ரவி வலியுறுத்தல்

சென்னை, நவ.28.-

சென்னை: "நமக்கான சட்டங்களை நாமே புதிதாக உருவாக்க வேண்டும்," என, சட்ட பல்கலையில் நடந்த அரசியலமைப்பு தின விழாவில், கவர்னர் ரவி பேசினார்.



சென்னை, பெருங்குடி, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலை வளாகத்தில், இந்திய அரசியலமைப்பு தின விழா நடந்தது. இதில், தமிழக கவர்னர் ரவி பேசியதாவது: இந்திய அரசியலமைப்பு சட்டம் உருவாக்கப்பட்டதற்கான உண்மையான நோக்கம், இன்னும் நிறைவேறவில்லை. சாதாரண மக்களுக்கும், நீதி சென்று சேர வேண்டும்.

நீதிமன்ற வழக்காடு மொழி, சாதாரண மக்களுக்கு புரியும்படி இல்லை.

அவர்களும் புரிந்துகொள்ளும் வகையில், வழக்காடு மொழிகள் மாற்றம் பெற வேண்டும். வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்புகளில், பிரிட்டன், அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளின் நீதிமன்ற தீர்ப்புகளையே, நாம் இன்றும் வழிகாட்டிகளாக பயன்படுத்தி வருகிறோம்.

நம் நாடு சுதந்திரம் அடைந்து 78 ஆண்டுகளா கிறது. இந்நிலையில், நமக்கான தீர்வுகளை நாமே உருவாக்கும் வகையில், நமக்கு நாமே சட்ட நெறிமுறைகளை உருவாக்கும் பொறுப்பு, நாளைய வழக்கறிஞர்களும், இன்றைய சட்ட மாணவர்களுமாகிய உங்களுக்கும் உள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

# விவசாயிகளுக்கு சாகுபடி பயிற்சி வகுப்பு இரண்டு ஆண்டுகளில் ரூ.135கோடி காலி



சென்னை. நவ.28.-

சென்னை: விவசாயிகளுக்கு சாகுபடி பயிற்சி வழங்குவதாக கூறி, இரண்டு ஆண்டுகளில் 135 கோடி ரூபாயை, வேளாண் துறை காலி செய்துள்ள தகவல் அம்பலமாகியுள்ளது.

தமிழகத்தில் 14.7 கோடி ஏக்கரில், 79.3 லட்சம் விவசாயிகள் வேளாண்மை, தோட்டக்கலை பயிர்கள் சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர். இதில், 62 சதவீதம் பேர், 5 ஏக்கருக்கு குறைவாக நிலம் வைத்துள்ள சிறு விவசாயிகள்.

சாகுபடி தொடர்பாக, விவசாயிகளுக்கு பயிற்சிகள் வழங்கும் திட்டத்தை வேளாண் துறை செயல்படுத்தி வருகிறது.

வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் வணிகம், மீன்வளம், பால்வளம், கால்நடை பராமரிப்பு, வனம், பட்டு வளர்ச்சி உள்ளிட்ட பல துறைகள் இணைந்து, இத்திட்டத்தை செயல்படுத்துகின்றன.

இதற்காக, 'அட்மா' என்ற பெயரில், வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை, அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டு உள்ளது.

மூன்று பேர் வேளாண்மை பட்டம், தோட்டக்கலை டிப்ளமா படித்த மூன்று பேர் வீதம், வட்டாரத்திற்கு நியமிக்கப்பட்டு உள்ளனர். இவர்கள் வாயிலாக, விவசாயிகளுக்கு சாகுபடி தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

கடந்த 2024 25ம் ஆண்டு, இத்திட்டத்திற்கு 43.6 கோடி ரூபாய் செலவிடப்பட்டு, 4.79 லட்சம் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டு, 91.6 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு உள்ளது.

இதன் வாயிலாக, ஐந்து லட்சம் பேருக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

இரண்டு ஆண்டுகளில், விவசாயிகளுக்கு பயிற்சி அளிப்பதற்கு மட்டும், 135 கோடி ரூபாயை வேளாண் துறை செலவழித்து வருகிறது.

ஆனால், இந்த பயிற்சி வாயிலாக சாகுபடி பரப்பு அதிகரிக்கவில்லை; சாகுபடி முறையிலும் பெரிய அளவில் மாற்றம் இல்லை என்ற தகவல் வெளியாகிஉள்ளது.

இதுகுறித்து, வேளாண் துறை வட்டாரத்தில் கூறப்படுவதாவது:

வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம், வனம், பட்டு வளர்ச்சி உள்ளிட்ட அனைத்து துறைகளுக்கும் சேர்த்து, அட்மா திட்ட நிதியில் பயிற்சி வழங்க வேண்டும்.

ஆனால், வேளாண் துறையே முழு நிதியையும் செலவிட்டு வருகிறது. ஒதுக்கும் நிதியில், 25 சதவீதம் ஊழியர்களுக்கு ஊதியமாக வழங்கப்படுகிறது.

இந்த பயிற்சியில் பங்கேற்றால், சாகுபடி மானியம் வழங்குவதாக வேளாண் துறையினர் கூறுவதால், சிறு விவசாயிகள் ஆர்வமுடன் பங்கேற்கின்றனர்.

ஒரே பயிற்சியில் மூன்று வகை போட்டோக்களை எடுத்து, அதை மூன்று முறை பயிற்சி அளித்ததாக கணக்கு காட்டப்படுகிறது.

அட்மா திட்டம் நடைமுறையில் உள்ள நிலையில், உழவர் நல சேவை மையம் மற்றும் உழவரை தேடி வேளாண்மை என்ற இரண்டு திட்டங்களை வேளாண் துறை துவங்கியுள்ளது.

இந்த திட்டங்கள் வாயிலாகவும் விவசாயிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இதற்கென தனியாக நிதி செலவிடப்பட்டு வருகிறது.

இன்ப சுற்றுலா அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளை வெளிநாடுகளுக்கு அழைத்து செல்வதாக கூறி, அதிகாரிகளும் இன்ப சுற்றுலா சென்று வருகின்றனர். கடந்த நிதியாண்டை விட நடப்பாண்டு நிதியாண்டில், 21,000 விவசாயிகளுக்கு கூடுதலாக பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

அதற்காக, கடந்தாண்டை விட கூடுதலாக 48 கோடி ரூபாய் செலவிடப்பட்டு வருகிறது. இதையெல்லாம் நிதித்துறை எப்படி கண்டுகொள்ளாமல் உள்ளது என்பது தெரியவில்லை.

இவ்வாறு அந்த வட்டாரத்தில் கூறப்படுகிறது.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000